**செ. கு. எண்**: 454 **நாள்**: 21.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 21.12.2012

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ஆனந்தராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், புதூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ராமலிங்கம் அவர்கள் 14.12.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், அண்ணாநகர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஜான்பாஸ்கர் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 18.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்ட ஆயுதப் படை பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சிதம்பரதாணு அவர்கள் 19.12.2012 அன்று கன்னியாகுமரி – திருவனந்தபுரம் நெடுஞ்சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், உறையூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. முத்துக்கண்ணு அவர்கள் 19.12.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. ஆனந்தராஜ் மற்றும் திரு. முத்துக்கண்ணு, தலைமைக் காவலர் திரு. ஜான்பாஸ்கர் மற்றும் முதல் நிலைக் காவலர்கள் திரு. ராமலிங்கம் மற்றும் திரு. சிதம்பரதாணு ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ஆனந்தராஜ் மற்றும் தலைமைக் காவலர் திரு. ஜான்பாஸ்கர், மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முத்துக்கண்ணு மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. ராமலிங்கம், சாலை விபத்தில் காலமான முதல் நிலைக் காவலர் திரு. சிதம்பரதாணு ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**